**செ.வெ.எண்: 572** **நாள்: 06.10.2021**

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**

**மூன்றாம் பாலினத்தவர்கள் புதிய மின்னனு குடும்ப அட்டைகள் விண்ணப்பித்தல் தொடர்பான சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

தமிழக அரசின் பொது விநியோக திட்டத்தின் கீழ் திருநங்கைகளுக்கு புதிய மின்னனு குடும்ப அட்டைகள் வழங்க உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வரும் 9.10.2021ஆம் தேதி அன்று புதுக்கோட்டை மாவட்டத்தின் அனைத்து தனி வட்டாட்சியர்கள் (குடிமைப்பொருள் வழங்கல்) மற்றும் வட்ட வழங்கல் அலுவலகங்களிலும் இது தொடர்பான சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது. இந்த முகாம்களில் திருநங்கைகள் புகைப்படம், ஆதார் அட்டை, நலவாரிய உறுப்பினர் அட்டை மற்றும் ஏதேனும் ஒரு இருப்பிட ஆதாரம் தொடர்பான சான்று வழங்க வேண்டும். 18 வயது பூர்த்தி அடைந்தவர்கள் மட்டுமே மின்னணு குடும்ப அட்டை விண்ணப்பிக்க தகுதியானவர்கள்.

விண்ணப்ப ஆவணங்கள் சிறப்பு முகாமிலேயே www.tnpds.gov.in என்ற இணையதள முகவரியில் அனைத்து வட்ட வழங்கல் அலுவலகங்களிலும் பதிவேற்றம் செய்யப்படும். எனவே இவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்ள புதிய மின்னணு குடும்ப அட்டை கோரும் மூன்றாம் பாலினத்தவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**